# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## நலன்புரி நன்மைகள் சபை
## வெற்றிடங்கள்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமையும் அனுபவமும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | உதவி நலன்புரி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம் - தொழிற்பாடு)<br><br>MM-1-1 | 01 | I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் / கணினி விஞ்ஞானம் /கணினி பொறியியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பட்டம் என்பவற்றில் சிறப்பு இளமானிப் பட்டம்.<br><br>அத்துடன்<br>முதலாவது பட்டம் பெற்றதன் பின்னர் குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட சேவைத்தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 02 | உதவி மேசை அலுவலர்<br><br>MA-1-2 | 03 | I. கல்விப் பொது சான்றிதழ் (சாதாரண தரம்) தேர்வில்<br>i. சிங்களம் / தமிழ்<br>ii. கணிதம்<br>iii. ஆங்கில மொழி<br>(பதவியின் செயற்பாட்டிற்கு தேவைப்படுமிடத்து)<br><br>ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்ததோடு மற்றும் மேற்குறித்த 03 பாடங்களில் திறமைச் சித்தியினை உள்ளடக்கிய பாடங்களுடன்<br>மற்றும்<br>கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர்தரம்) தேர்வில் மூன்றில் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (பொதுப் பரீட்சையின் சித்தி நீங்கலாக). |
| 03 | **சாரதி**<br><br>PL-3 | 02 | I. க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது இரண்டு (02)திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அத்துடன்<br>கனரக வாகனம் செலுத்துவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் (Heavy Vehicle Licence) பெற்று ஆகக் குறைந்தது மூன்று (03) வருடகால அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். |

**வயது :**

**உதவி நலன்புரி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம் - தொழிற்பாடு)**
22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்.
**உதவி மேசை அலுவலர்** - 18 வயதிற்கு மேற்பட்ட 45 வயதிற்கு கீழ்ப்பட்டோராகவிருத்தல்
**சாரதி** : 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதினை விஞ்சாதுமிருத்தல் வேண்டும்.

**தெரிவுசெய்யப்படும் முறை :**

நேர்முகப்பரீட்சையில் பெறுகின்ற அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு அடிப்படை:**

இப் பதவி நிரந்தரமானது. பதவி நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

**மாதாந்த சம்பளம்:**

MM 1-1-2016 ரூபா (53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575)+ அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

MA 1-2-2016 (Rs 27,910 .-10 x 300 - 7 x 350 - 12 x 600 - 12 x 710 – Rs. 49,080) + **அரசினால்அனுமதிக்கப்பட்ட**கொடுப்பனவுகள்.

PL 3-2016 Rs. [26,290 – 10 x 270 - 10 x 300 – 10 x 330 - 12 x 350 - 39,490]+**அரசினால்அனுமதிக்கப்பட்ட**கொடுப்பனவுகள்.

ஊழியர் சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 8% செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அரசாங்க பங்களிப்பான 12%இனை நலன்புரி நன்மைகள் சபை செலுத்தும். மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான 3% பங்களிப்பு நலன்புரி நன்மைகள் சபையினால் செலுத்தப்படும்.

**விண்ணப்பப்படிவத்தை பின்வரும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யமுடியும்:**

http://www.treasury.gov.lk/web/ministry-of-finance/vacancies
https://www.wbb.gov.lk/web/si/jobs

பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை 2024.12.20ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்,**ஆணையாளர், நலன்புரி நன்மைகள் சபை,J.R ஜெயவர்தன மத்திய நிலையம்,191, தர்மபால மாவத்த, கொழும்பு – 07.**எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். அரசாங்க / கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கும், பூரணமற்ற அல்லது இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலும், விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல், திருத்துதல், மாற்றியமைத்தல் அல்லது விண்ணப்பதாரிகளை சுருக்க பட்டியற்படுத்தல் தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபையின் ஆணையாளரின் தீர்மானமே இறுதியானதாக கருதப்படும்.

**ஆணையாளர்**
**நலன்புரி நன்மைகள் சபை**
**நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**